**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR**

| | | |
|---|---|---|
| Calender | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : CC.84/2024 | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : LW-1/PW-1 | Village: |
| Name | : முருகன் (தலைமை காவலர்) | Age :40 |
| | | Taluk : |
| Father's/Husband's Name | : முத்துசாமி | |
| | | Religion : |
| Nationality | : Indian | |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 25.02.2026**

சாட்சியை திருநீலக்குடி காவலர் திருமதி. அனிதா என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

2 வது **எதிரி ஆஜரில் இல்லை. அவரது தரப்பில் 317 குவிமுச பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 1,3,4 எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**:

நான் தற்போது சுவாமி மலை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 03.04.2023 ம் தேதி இரவு சுமார் 10, 11 மணியளவில் திருவிடைமருதூர் காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் தனிப்பிரிவில் முதல் நிலை காவலராக பணியில் இருந்தபோது திருநாகேஸ்வரத்தில் தோப்பு தெருவில் சட்டத்திற்கு புறம்பாக மது விற்பனை செய்வதாக

தகவல் அறிந்து நானும் அருள்முருகன் காவலரும் ரோந்துக்கு சென்றோம். தோப்பு தெரு மெயின்ரோட்டில் நாங்கள் ரோந்துக்கு சென்றபோது 5, 6 நபர்கள் நின்று கொண்டிருந்தார்கள். நாங்கள் காவலர் என்பதை அறிமுகம் செய்து அங்கு நிற்க கூடாது என்று அறிவுறுத்தி அனுப்பி வைத்துவிட்டு திருநாகேஸ்வரம் கடைவீதிக்கு ரோந்துக்கு சென்றுவிட்டு மீண்டும் 11.30 மணியளவில் திரும்ப வந்தபோது தோப்பு தெரு மெயின்ரோட்டில் ஆனந்த், ஸ்டாலின் மற்ற எதிரிகளும் நின்று கொண்டிருந்தார்கள். நாங்கள் சென்று நிற்ககூடாது என்று சொன்ன பின்பும் ஏன் நின்று கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்டதற்கு நீ போலிஸ் என்பது எப்படி எனக்கு தெரியும் என்று அங்கிருந்த நபர்கள் கூறினார்கள். பேசிக்கொண்டிருந்போது அருள்முருகனை அங்கிருந்த நபர்களில் ஒருவர் கையால் தள்ள ஆரம்பித்தார்கள். பேசிக்கொண்டிருந்போதே ஏன் இப்படி செய்கிறீர்கள் என்று கேட்டதற்கு எங்கள் இருவரையும் கீழே தள்ளி அடிக்க ஆரம்பித்தார்கள். அங்கிருந்தவர்களில் ஒருவர் அடையாளம் தெரியவில்லை. என்னை என் தலையில் கல்லால் அடித்துவிட்டார். எனக்கு அதிகமாக ரத்தம் வெளியேறியதால் தலைசுற்றி அந்த இடத்திலேயே உட்கார்ந்து அருள்முருகனை சத்தம்போட்டு அழைத்தேன். அருள்முருகன் அருகில் இருந்த ஆட்டோவை அழைத்து வந்து என்னை திருநாகேஸ்வரத்தில் உள்ள ஏவிஆர் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றார். அங்கு முதல் உதவி எடுத்துக் கொண்டு மறுநாள் காலையில் கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றேன். அங்கு சிகிச்சையில் இருந்தபோது திருநீலக்குடி காவல் நிலைய போலிசார் என்னிடம் வாக்குமூலம் வாங்கினார்கள். நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள விவரம் எனக்கு தெரியும். அந்த புகார் வாக்குமூலம் அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

அசாஆ 1 புகார் வாக்குமூலத்தை என்னை விசாரித்த போலிசார் எழுதினார்கள். அதில் உள்ள விவரம் எனக்கு தெரியும். புகார் வாக்குமூலத்தில் 3 நபர்கள் தாக்கியதாகவும் ஆனந்த், சுரேஷ் பெயரை மட்டும் குறிப்பிட்டு மற்றொருவர் பெயர் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். நான் விசாரித்த வகையில் 2 நபர்கள் பெயர்தான் எனக்கு தெரிந்தது. சம்பவம் 11.30 மணியளவில் நடந்தது. என்னை தாக்கிய நபர் பெயர் தெரியாது. ஆனால் கல்லால் என்னை தாக்கினார்கள். என்னை மருத்துவமனைக்கு சம்பவம் நடந்து 10, 20 நிமிடங்களில் அருள்முருகன் சிகிச்சைக்கு அழைத்து சென்றார். தலையில் வலி இருந்ததால் மறுநாள் கும்பகோணம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தேன். ஏவிஆர் சிகிச்சை முடிந்து நேரடியாக வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றால் சரிதான். எதிரிகளுக்கு எதிராக வழக்கு பதிவு செய்ய வேண்டும் என்று எங்கள் உயர் அதிகாரி கேட்டு கொண்டதால் நான் கும்பகோணம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தேன் என்றால் சரியல்ல. என்னை பரணி என்ற காவலர் கும்பகோணம் அரசு மருத்துவமனையில் மறுநாள் காலையில் சிகிச்சைக்காக சேர்த்தார். சம்பவ இடத்தில் நானும் காவலர் அருள்முருகனும் இருந்தோம். எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் எதிரிகள் ஊரில் திருவிழா சம்பவ தினத்தன்று நடந்தது என்றாலும் கூட்டத்தில் இருந்த ஒருவர்தான் என்னை தாக்கினார்கள் என்றாலும் சரியல்ல. ஊரில் சம்பவ தினத்தன்று திருவிழா நடந்தது என்றால் சரிதான். இந்த வழக்கு எதிரிகளுக்கும் எனக்கு ஏற்பட்ட காயத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் காவல் துறையில் பணிபுரிவதால் எனது செல்வாக்கை பயன்படுத்தி எதிரிகள் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை முடித்துக் கொள்ளப்பட்டது.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

Sd/- P. Rangeswari,

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர். (FAC)**